2000 மார்ச் 30]

தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிபாளையத்தைப் போலவே பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் தாட்கோவின் மூலம் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 200 தொழிற்கூடங்களும் பனியன் உற்பத்திக்காக மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என்று வரையறை செய்து ஒதுக்கினார்கள். பட்டியல் சாதியினர் சமுதாயத்திலே அப்படி பனியன் தொழில் மட்டுமே செய்யக்கூடியவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அது தொடர்புடைய எந்தத் தொழிலுக்காகவாவது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா, விரைந்து முடிவு எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான நேர்முகத் தேர்வும் 17-2-2000 அன்று நடைபெற்றிருக்கிறது. இதற்குரிய வேலை வாய்ப்புகள்; 200 கூடங்கள் இருக்கின்றன. அதாவது 200 கூடங்களிலும் எந்தெந்தத் தொழில் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவற்றை ஆய்ந்து, அரசு முடிவு எடுத்து அதற்கேற்ப, அந்த விற்பனையாகக்கூடிய பொருட்களுக்கான உற்பத்தியைச் செய்து கொடுப்பதற்காகவும், அதே நேரத்தில் அந்த முன்மொழிவுகள் வரப்பெற்றால் அவர்களுக்குரிய தொழில்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதற்கும் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

பயணிகள் விடுதி

***17711—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 30

தமிழ்நாடு சுற்றுலா வாரியம் நடத்தும் பயணிகள் விடுதிகளில் தங்கும் அறைகளின் வாடகையைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் நடத்தும் பயணிகள் விடுதிகளில் தங்கும் அறைகளின் வாடகையைக் குறைக்கும் கருத்துரு தற்போது தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தில் எதுவுமில்லை.

திரு. ந. கருப்பண்ண உடையார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு எத்தனை இடங்களில் சுற்றுலா மையத்தின்மூலம் பயணிகள் விடுதிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. தற்போது என்ன வாடகை அதில் வசூலித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். சுவாமிமலை போன்ற பிரசித்திபெற்ற கோயில் இருக்கும் இடங்களிலே தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்ற இடங்களிலே சுற்றுலாத் துறைமூலம் பயணிகள் தங்கும் விடுதிகளையும், அதைப்போல மற்ற இதர வசதிகளையும் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக 36 விடுதிகள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறைந்த வாடகைகளில் தங்குவதற்காக இளைஞர் விடுதிகளும் தமிழகத்தில் 8 இடங்களில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிதாக விடுதிகள் கட்டக்கூடிய செயற்குறிப்புகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. தனியார் யாராவது முன்வருவார்களேயானால், அவர்களை இந்த அரசு ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலே மானியங்கள் கொடுக்கக்கூடிய அளவிற்கு வசதி வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

2000 மார்ச் 30]

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற சுற்றுலா விடுதிகளிலே வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. தரம் குறைந்த அறைகளாகக் காணப்படுகின்றன. அவற்றைத் தரம் உயர்ந்த அறைகளாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில், தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு 2½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, தரத்தை உயர்த்தக்கூடிய அளவிற்கு விடுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கோவை, மதுக்கரை அருகே வழுக்குப்பாறை கிராம விவசாயத் தொழிலாளி மனைவி மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து (குறுக்கீடு) வினா நேரம் முடிந்தது என்று சொன்னவுடனேயே எழுந்து நிற்க வேண்டுமா? இது என்ன தினமும் மாமூலா?

கோவை மாவட்டம், மதுக்கரை, வழுக்குப்பாறையைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளியின் மனைவி கொல்லப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே. சுப்பராயன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். சுருக்கமாகப் பேசுமாறு முதலில் திரு. சி. ஞானசேகரனை அழைக்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை அருகேயுள்ள வழுக்குப்பாறை என்கிற